பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

24 10 2024 **THURSDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. விண்வெளித்துறையில் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கென ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான மூலதன நிதியத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. சாலை பாதுகாப்பை உறுதி செய்வதற்காக செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 16 பேரை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

4. தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வரும் 29-ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

5. இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 259 ரன்னுக்கு ஆட்டமிழந்தது. வாஷிங்டன் சுந்தர் 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

விண்வெளித்துறையில் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கென ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான மூலதன நிதியத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இந்த நிதியத்தின் மூலம் 40 புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கப்படும் என்றார்.

ஆந்திரா, தெலங்கானா, பீகார் மாநிலங்களில் ஆறாயிரத்து 798 கோடி ரூபாய் மதிப்பில் இரண்டு ரயில்வே திட்டங்களை செயல்படுத்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

ஆந்திராவின் தலைநகர் அமராவதியில் ரயில் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தும் திட்டம் இதில் அடங்கும் என்றார்.

இதன்மூலம் அமராவதியிலிருந்து ஹைதராபாத், சென்னை, கொல்கத்தா, நாக்பூர் ஆகிய இடங்களுக்கு ரயில் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்படும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

சாலை பாதுகாப்பை உறுதி செய்வதற்காக செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பங்களை மத்தியஅரசு பயன்படுத்தி வருவதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் போக்குவரத்து தொழில்நுட்ப கண்காட்சியை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

சாலை கட்டுமானப்பணிகளை மேற்கொள்ளும்போது திறன்மிகு பொறியாளர்களின் யோசனைகளுக்கு ஊக்கம் அளிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 16 பேரை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ராமேஸ்வரத்தை சேர்ந்த 16 மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையை தாண்டியதாக கூறி, நேற்று இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை சிறைகளில் உள்ள தமிழகத்தை சேர்ந்த 128 மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் விரைந்து மீட்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

<<<<>>>>

நீர்நிலை ஆக்கிரமிப்புகள் நீதிமன்ற உத்தரவுப்படி அகற்றப்பட்டு வருவதாக நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம் காங்கேயநல்லூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீர்நிலைகளில் வீடுகள் கட்டப்பட்டிருந்தால், உரிய மாற்று ஏற்பாடுகளுக்கு பின்னர் அகற்றப்படும் என்றார்.

வடகிழக்கு பருவமழையினால் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு துரைமுருகன் கூறினார்.

<<<<>>>>

முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் புகழுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில், திமுக கருத்துக்களை தெரிவிப்பது கண்டித்தக்கது என்று பிஜேபி கூறியுள்ளது.

இதுதொடர்பாக இன்று அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக-வின் மாணவர் அணி மாநிலத்தலைவர் ஒருவர் காமராஜர் குறித்து அவதூறு பரப்பியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மதிய உணவு திட்டத்தை கொண்டுவந்து கல்வி வளர்ச்சிக்காக பாடுபட்ட காமராஜர் மட்டுமின்றி, தன்னலமற்ற தமிழ் தலைவர்கள் தொடர்பாக பொய் அவதூறுகள் பரப்புவதை திமுக கைவிட வேண்டும் என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியின்படி மதுக்கடைகளின் எண்ணிக்கையை திமுக அரசு குறைக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு, திமுக அரசை வலியுறுத்தியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் தைலாபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தீபாவளி பண்டிகையையொட்டி கூட்ட நெரிசலை சமாளிப்பதற்காக தனியார் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து இயக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருவது முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

போக்குவரத்துத்துறையை தனியார் மயமாக்குவதற்கான நடவடிக்கை இது என்றும் திரு ராமதாசு குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

தென்பெண்ணை ஆற்றில் ரசாயன கழிவுநீர் கலப்பதை தடுக்க தமிழக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள இந்த ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது, ஓசூர் - நந்திமங்கலம் சாலையில் உள்ள தட்டக்கானப்பள்ளி தரைப்பாலத்தை தண்ணீரும், ரசாயன கழிவு நுரையும் மூழ்கடித்து செல்வதாக கூறியுள்ளார்.

சம்பந்தப்பட்ட பகுதியை மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் ஆய்வு செய்து உண்மை நிலவரத்தை கண்டறிய வேண்டும் என்றும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹு, அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.

வரைவு வாக்காளர் பட்டியல் வரும் 29-ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அடுத்த மாதம் 28-ஆம் தேதிவரை காலஅவகாசம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 16, 17 மற்றும் 23, 24-ஆம்தேதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் நடைபெறும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த ஆண்டு ஜனவரி 6-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் அதன் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள **Dana** தீவிர புயல் ஒடிஷாவின் **Bhitarkanika – Dhamara** இடையே இன்று நள்ளிரவு தொடங்கி, நாளை அதிகாலை வரை கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக ஒடிஷா மற்றும் மேற்குவங்கத்தில் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி முதல் கன்னியாகுமரி வரையிலான மேற்குதொடர்ச்சி மலையையொட்டிய மாவட்டங்கள், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி நகராட்சியில் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை மாநில அமைச்சர்கள் திரு கே என் நேரு, திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் ஆகியோர் இன்று தொடங்கிவைத்தனர்.

--------------------

விழுப்புரம் மாவட்டத்தில் சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் கட்டணமில்லா தொலைபேசி உதவி எண் சேவையை மாவட்ட முதன்மை நீதிபதி திரு இளவரசன் இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆதரவற்ற மகளிர் நல வாரியம் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு கருத்தரங்கினை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

செங்கல்பட்டு மாவட்டத்தில் பசுமை தீபாவளியை கொண்டாட மாணவர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

--------------------

சென்னையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க விக்டோரியா பொது அரங்கை சீரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா இன்று ஆய்வு செய்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 16 ரன் எடுத்துள்ளது.

புனேயில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், **Yashavi Jaiswal** ஆறு ரன்னுடனும், சுப்மன் கில் 10 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, டாஸ் வென்று பேட் செய்த நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 259 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அபாரமாக பந்துவீசி, வாஷிங்டன் சுந்தர் 7 விக்கெட்டுகளையும், அஷ்வின் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

----------

இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், நியூசிலாந்து வெற்றி பெற 228 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி, 44 புள்ளி மூன்று ஓவரில், 227 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-----------------

பிரான்சில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் ஸ்குவாஷ் போட்டியில்

இந்தியாவின் **Akanksha Salunkha** மற்றும் **Tanvi Khanna** காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

---------

இத்தாலியில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Desai – Ghorpade** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, கொரியாவின் **Seo – Kim** இணையை வென்றது.

---------

துருக்கியில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

***<<<<END>>>>***